அவர்கள பிறந்த விருதுநகரிலும் இந்த நிலை இருக்கிறது. காஞ்சிபுரம் பேருந்து நிலையம் சுகாதார வசதி இல்லாமல் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது. விருதுநகர் பேருந்து நிலையமும் சுகாதார வசதியற்று, நெரிசலாக இருக்கிறது. அவற்றை நவீனமயப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். விருதுநகர் நகர பேருந்து நிலையத்தை மாற்றி அமைத்தால் நெரிசலைச் சமாளிக்கலாம். அதை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது வெள்ளக்கோவில் பேருந்து நிலையத்தைப் பற்றிய கேள்வி.

மேலச்செவல் பஞ்சாயத்தில் மருத்துவமனை.

119—(*வினா எண். 1535) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் நகர பஞ்சாயத்து பொது மக்களிடமிருந்து மருத்துவமனை அமைக்கக் கோரி அரசுக்கு மனு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேலச்செவல் கிராமத்தில் தற்போது இந்தியமுறை ஊராட்சி ஒன்றிய மருந்தகம் இயங்கி வருகிறது. உள்ளாட்சித் துறையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்திய முறை மருந்தகங்களை நவீன முறை மருந்தகமாக மாற்றக் கூடாது என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 18-1-1984 நாளிட்ட அரசாணையில் இனிவரும் காலங்களில் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு எடுத்துக் கொள்வதில்லை என ஆணையிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நடந்து வருவது சித்த மருத்துவத்தைச் சார்ந்த மருந்தகம் ஆகும். அது 10 ஆயிரம் ஜனத்தொகை இருக்கின்ற இடம். இப்போது இருக்கின்ற கொள்கைப்படி

1987 நவம்பர் 16]

ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகம் இருந்தால் அங்கே மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, இந்தச் சித்த மருந்தகத்தை வேறு பகுதிக்கு மாற்றி, அந்தக் கொள்கையைத் தளர்த்தி அங்கே ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அல்லது மருத்துவமனை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசிலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் நம்பிக்கை வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சித்த மருத்துவம் சிறந்து ஓங்கி வளர்ந்துவரும் ஒரு மருத்துவம் ஆகும். இதிலே அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது. மேலும், சித்த மருத்துவ மனையை அப்புறப்படுத்திவிட்டுதான் நவீன மருத்துவ மனை ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை. அதைத் தனியாக ஆரம்பிக்கலாம். சித்த மருத்துவம் நடைபெற்று வருவது ஊராட்சி ஒன்றியத்தினால் நடக்கிறது. தனியாக ஆரம்பிப்பது என்றால், அரசுதான் ஆரம்பிக்க வேண்டும். அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

கஞ்சனூர் மருத்துவமனைக்கு அதிகாரிகள் நியமித்தல்.

120—(*வினா எண். 2343) திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா, திருப்பனந்தாள் ஒன்றியத்தைச் சார்ந்த கஞ்சனூர் கிராமத்தில் கட்டப்பட்ட அரசு மருத்துவமனை இரண்டு ஆண்டுகளாக மருத்துவ அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் செயல்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : கஞ்சனூர் கிராமத்தில் ஊரக மருந்தகம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு பணிபுரிந்த மருத்துவர் ஓய்வு பெற்றுவிட்டபடியால் தகுதியான நபர் பணி மேற்கொள்ள முன்வராமையால் மருத்துவ அதிகாரி பணியிடம் காலியாக உள்ளது. தற்போது பந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவர், கஞ்சனூர் மருந்தகத்தின் பணியினை கவனித்து வருகிறார்.